தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
21.7.2023 (வெள்ளிக்கிழமை)

நோயாளிகளின் சிரமத்தை போக்க

# ஜிப்மர் புற்றுநோய் பிரிவில் உதவி மையம்

கோரிமேடு, ஜூலை.21–

புதுவை ஜிப்மரில் மண்டல புற்றுநோய் மையத்தில் ஆஸ்தா கேன்சர் கேர் திட்டத்தின் கீழ் புற்றுநோயாளிகளுக்கு உதவிடும் வகையில் உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதனை மருத்துவ கண்காணிப்பாளர் துரைராஜன் திறந்துவைத்தார். நிகழ்ச்சியில் துணை மருத்துவ கண்காணிப்பாளர் பிஸ்வஜித் துபாஷி, கூடுதல் பேராசிரியர் ஸ்மிதா கயல், கதிர்வீச்சு புற்றுநோயியல் துறையின் கூடுதல் பேராசிரியர் ஜெகதீசன், உதவி மையத்தின் பொறுப்பாளர் சிவகுகன் உள்பட பலர் கலந்துகொண்டனர். இந்த மையமானது நோயாளிகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு மருத்துவ பதிவு, பயண முன்பதிவு தகவல் மற்றும் உள்ளூர் தங்குமிட வழிகாட்டுதல், கிமோதெரபியின் போதும் கீமோதெரபிக்கு பிறகுமான உணவு முறைகள், தொலைபேசி மூலமாகவோ அல்லது நேரடியாகவோ மனநல ஆலோசனைகள், மற்ற மருத்துவமனைகளிலிருந்து வரும் நோயாளிகள் மற்றும் மருத்துவமனைகளுக்குள் இருக்கும் நோயாளிகளை இடம்மாற்றுதல், சக்கர நாற்காலி வசதிகள், புற்றுநோயாளிகளை புற்றுநோய் அல்லாத மற்ற மருத்துவ பிரச்சினைகளுக்கு பரிந்துரைத்தல் மற்றும் மண்டல புற்றுநோய் மையத்தில் பதிவு செய்யப்பட்ட நோயாளிகளை தொடர்ந்து கண்காணித்தல் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் வழங்கப்படுகிறது.

தினமலர்




ஜிப்மர் மண்டல புற்றுநோய் மையத்தில் ஆஸ்தா கேன்சர் கேர் உதவி மையத்தினை மருத்துவ கண்காணிப்பாளர் துரைராஜன் திறந்து வைத்தார்.

# ஜிப்மர் புற்றுநோய் மையத்தில் உதவி மையம் திறப்பு

**புதுச்சேரி, ஜூலை 21–**

ஜிப்மர் மண்டல புற்று நோய் மையத்தில் 'ஆஸ்தா கேன்சர் கேர்' என்ற பெயரில் உதவி மையம் ஏற்படுத்துள்ளது.

ஆஸ்தா உதவி மையத்தினை டாக்டர்ஸ் பார் யூ அமைப்பு, சர்வதேச பான்–இந்தியா மனிதாபிமான அமைப்பு, பைசர் கேன்சர் கேர் அமைப்புகள் இணைந்து ஏற்படுத்தியுள்ளன.

இம்மையத்தை மருத்துவமனை கண்காணிப்பாளர் துரைராஜன் திறந்து வைத்தார். துணை மருத்துவ கண்காணிப்பாளர் பிஸ்வஜித் துபாஷி, கதிர்வீச்சு புற்று நோயியல் துறை தலைவர் ஜெகதீசன், மருத்துவ புற்று நோயியல் துறை பேராசிரியர் பிரசாந்த் கணேசன், டாக்டர்ஸ் பார் கியூ திறன் மேம்பாட்டு இயக்குநர் சந்தீபன், பைசர் பிராந்திய கணக்கு மேலாளர் சந்திரமவுலீஷ்வரன், உதவி மைய பொறுப்பாளர் சிவகுகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மருத்துவமனையின் மருத்துவ பதிவு பகுதியில் அமைந்துள்ள ஆஸ்தா உதவி மையம் நோயாளிகள், அவர்களது குடும்பங்களுக்கு மருத்துவ பதிவு, பயண முன் பதிவு தகவல், உள்ளூர் தங்குமிட வழிகாட்டுதல் ஆலோசனைகளை வழங்கும். மேலும், சிகிச்சை நிதிக்கான அணுகல், கீமோதெரபின்போது உணவு முறைகள், தொலைபேசி மூலமாக அல்லது நேரடியாக மனநல ஆலோசனைகள் வழங்க உள்ளது.

மருத்துவமனைகளில் இருந்து வரும் நோயாளிகள், மருத்துவமனைக்குள் இருக்கும் நோயாளிகளை இடம் மாற்றுதல், சக்கர நாற்காலி வசதிகள், புற்றுநோயாளிகளை புற்றுநோய் அல்லாத மற்ற மருத்துவ பிரச்னைகளுக்கு பரிந்துரை செய்யும்.

டாக்டர்ஸ்பார்யூ அமைப்பின் தலைவர் ராஜத்ஜெயின் கூறும்போது, ஆஸ்தா திட்டம் கடந்த 2021 ம் ஆண்டு துவங்கப்பட்டது. தற்போது 14 மருத்துவமனைகளில் 2,33,856 நோயாளிகளுக்கு இத்திட்டத்தின் மூலம் உதவி செய்யப்பட்டுள்ளது.

சிகிச்சையின்போது, புற்றுநோயாளிகளை பராமரிப்பது, பல்வேறு அரசு திட்டங்களுடன் நோயாளிகளை இணைப்பது, வழிகாட்டுதல், நம்பிக்கை ஏற்படுத்தல் பணிகளை மேற்கொள்கிறது. தனிப்பட்ட நன்கொடையாளர்கள் மூலம் நோயாளிகளுக்கு நிதியுதவி ஏற்படுத்தித் தரப்படுகின்றது என்றார்.

தினகரன்
ஜூலை 21, 2023 வெள்ளிக்கிழமை

# ஜிப்மரில் புற்று நோயாளிகளுக்கு உதவி மையம் துவக்கம்

**புதுச்சேரி, ஜூலை 21:** புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் மண்டல புற்றுநோய் மையத்தில் ஆஸ்தா கேன்சர் கேர் திட்டத்தின் கீழ் புற்றுநோயாளிகளுக்கு உதவும் வகையில் ஒரு உதவி மையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. ஆஸ்தா கேன்சர் கேர் உதவி மையம் என்பது புற்றுநோயாளிகளுக்கான பராமரிப்பு, ஆதரவு மற்றும் சேவையில் சமூக பங்களிப்பை மேம்படுத்துவதற்கான முதல்படி ஆகும்.

ஜிப்மர் மருத்துவமனையின் மருத்துவ பதிவு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஆஸ்தா உதவி மையம் நோயாளிகள் மற்றும் குடும்பங்களுக்கு மருத்துவ பதிவு, பயண முன்பதிவு தகவல் மற்றும் உள்ளூர் தங்குமிட வழிகாட்டுதல், சிகிச்சை நிதிக்கான அணுகல், கீமோதெரபியின் போது மற்றும் கீமோதெரபிக்கு பிறகு உணவு முறைகள், தொலைபேசி மூலமாகவோ அல்லது நேரடியாகவோ மனநல ஆலோசனைகள், மற்ற மருத்துவமனைகளிலிருந்து வரும் நோயாளிகள் மற்றும் மருத்துவமனைகளுக்குள் இருக்கும் நோயாளிகளை இடம் மாற்றுதல், சக்கர நாற்காலி வசதிகள், புற்றுநோயாளிகளை புற்றுநோய் அல்லாத மற்ற மருத்துவ பிரச்னைகளுக்கு பரிந்துரைத்தல் மற்றும் மண்டல புற்றுநோய் மையத்தில் பதிவு செய்யப்பட்ட நோயாளிகளை தொடர்ந்து கண்காணித்தல் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை வழங்குகிறது.

தினமணி

# ஜூலை 28-இல் ஜிப்மர் புற நோயாளிகள் பிரிவு இயங்காது

புதுச்சேரி, ஜூலை 20: மொஹரம் பண்டிகையை முன்னிட்டு, ஜிப்மரில் வரும் 28-ஆம் தேதி வெளிப்புற நோயாளிகள் பிரிவு இயங்காது என மருத்துவமனை நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து ஜிப்மர் இயக்குநர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: மொஹரம் பண்டிகையை முன்னிட்டு மத்திய அரசு வரும் வெள்ளிக்கிழமை (ஜூலை 28) விடுமுறை அறிவித்துள்ளது. எனவே, அன்றைய தினம் ஜிப்மரின் வெளிப்புற நோயாளி பிரிவுகள் இயங்காது. வெள்ளிக்கிழமை ஜிப்மருக்கு நோயாளிகள் வருவதைத் தவிர்க்க வேண்டும். அவசரப் பிரிவு சேவைகள் அனைத்தும் வழக்கம் போல் இயங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.